மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண். 224 /2022

வா.சா.1

பெயர்:மணிஎன்றமுருகையா தேதி :08.01.2024
வயது : த/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

1873 1ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தானது லெட்சுமியாபுரம் கிராமத்தில் புல எண். 315 ல் உள்ளது. புல எண். 315 ன் அமைப்பு மற்றும் சுற்றியுள்ள அமைப்பு குறித்து எனக்கு தெரியுமா என்றால் அமைப்பு பற்றி தெரியாது. புல எண். 315 ன் நான்கு புற எல்லைகளாக என்ன என்ன இடங்கள் உள்ளன என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் வடக்கே மக்காளி வாத்தியார் இடம் உள்ளது. அவர் இடத்திற்கு தென்புறம் எனக்கு நான்கு செண்ட் இடம் உள்ளது. புல எண். 315 க்கு கிழக்கே மெயின் ரோடு உள்ளது. புல எண். 315 க்கு மேற்கே என் அண்ணன் சுடலைமணிக்குரிய நான்கு செண்ட் இடம் உள்ளது.

2. எனது இடம் உட்பிரிவு செய்யப்பட்டு உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 24 செண்ட் ஆகும். அந்த 24 செண்ட்டில் சுப்பிரமணியனுக்கு 16 செண்ட் பாத்தியம், சுடலைமணிக்கு நான்கு செண்ட் பாத்தியம், எனக்கு 4 செண்ட் பாத்தியம் ஆகும். எங்கள் இடத்திற்கு தென் பக்கம் ஆறுமுகம் என்பவருக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. அது எவ்வளவு செண்ட் என்று தெரியாது. மக்காளி வாத்தியாருக்கு எவ்வளவு செண்ட் இடம் என்று தெரியாது. சுப்பிரமணியக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் இடம் என் இடத்திற்கு தென் பக்கத்தில் உள்ளது. இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய 4 செண்ட்

இடத்திற்கு பிரதிவாதிகள் எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றும், பிரதிவாதிகள் எனது இடத்தையும் சேர்த்து விற்பனை செய்ததாக கேள்விப்பட்டேன் அதனாலும் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3. வா.சா.ஆ.3 ல் உள்ள நிலங்கள் எவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டு உள்ளது என்ற விபரம் தெரியாது. வா.சா.ஆ.3 ல் எனது நிலம் எங்கு உள்ளது என்றால் புல எண். 315 ல் 2(பி) ல் உள்ளது. புல எண். 315 ல் 2(பி) க்கு வடக்கு பக்கம் தான் மக்காளி வாத்தியாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். புல எண். 315 ல் 2(பி) க்கு தெற்கு பக்கம் தான் சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. புல எண். 315 ல் 2(பி) க்கு மேற்கு பக்கம் தான் சுடலைமணி இடம் உள்ளது. புல எண். 315 ல் 2(பி) க்கு கிழக்கு பக்கம் மெயின்ரோடு உள்ளது. வா.சா.ஆ.3 ல் புல எண். 315 ல் 2(பி) க்கு கிழக்கு பக்கம் மெயின்ரோடு உள்ளவாறு காட்டப்படவில்லை என்றால் தெரியாது. நான் சொன்னமாதிரி எனது இடத்திற்கு தெற்கு பக்கம் புல எண். 316 ல் தான் சுப்பிரமணியனின் நிலம் உள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான். எனது நிலத்திற்கு வடக்கு பக்கம் என்ன சர்வே எண் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தை எந்த ஆவணத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும், அதே தேதியில் உள்ள மற்றவர்களின் கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும் தாக்கல் செய்தேன்.

4. பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தின் படி தான் பூமியில் இடம் உள்ளது. பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தின் அடிப்படையில் பூமியில் இடம் இல்லை என்றாலும், அதற்கு மாறாக வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிராதில் எத்தனை சொத்துக்கள் காண்பித்துள்ளேன் என்றால் என்னுடன் 3 பேர் சொத்தை காண்பித்துள்ளேன். பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ஏபிசிடிக்குரிய மொத்த பத்திரம் என் அண்ணன் மகன் ஜெகன் என்பவரிடம்

உள்ளது. எனது அண்ணன் மகனிடம் இருந்து அந்த ஆவணத்தை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். மொத்த நிலமும் ஜெகனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிராது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 24 செண்ட் ஆகும். அந்த 24 செண்ட்க்கு உரிய ஆவணம் எனது அண்ணன் மகன் ஜெகனிடம் உள்ளதா என்றால் சுப்பிரமணியனிடம் உள்ளது. சுப்பிரமணியன் காலமாகிவிட்டார். சுப்பிரமணியன் இடம் மகாலெட்சுமி என்பவரிடம் விற்று விட்டார். மகாலெட்சுமி கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 5 பக்கத்தில் உள்ள 2 வது நிழல் படம் பொன்னுச்சாமி மகன் சுப்பிரமணியன் என்றால் சரிதான். முதல் படம் மகாலெட்சுமி என்றால் சரிதான். **பொன்னுச்சாமி மகன் சுப்பிரமணியன் 05.03.2014 ல் மகாலெட்சுமிக்கு கிரையம் செய்து கொடுத்து உள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக கணினி நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண். 315 க்குரிய புல வரைபடமும், அதற்குரிய பட்டாவும் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நான் அந்த நிலத்திற்குரிய பட்டாவை வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் உள்ள பட்டாவின் பெயர்களோடு வா.சா.ஆ.2 ல் உள்ள பெயர்கள் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் நான் சொல்லக்கூடிய நிலத்தை தவிர்த்து பிற நிலத்தின் உரிமையாளர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மகாலெட்சுமி, இராஜேந்திரன் ஆகியோர்கள் பிற நிலத்தின் உரிமையளார்கள் என்றால் சரிதான். எனது நிலத்தை நிர்ணயிக்க வேண்டும் என்றால் மகாலெட்சுமி, இராஜேந்திரன் ஆகியோர்கள் தேவையான தரப்பினர்கள் என்றால் அவர்களை நான் கூப்பிட முடியாது. மகாலெட்சுமி, இராஜேந்திரன் ஆகியோர்கள் இவ்வழக்கிற்கு

அவசியமான தரப்பினர்கள் என்றாலும், அவர்களை சேர்க்காததால் எனது தாவாவை தீர்க்கமுடியாது என்றாலும் சரியல்ல.

6. சுப்பிரமணியன் பெயரிளதள்ளள்ளதுஎன ல் உள்ள கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்தை கண்டுப்பிடிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணத்தில் என்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பு அறிவு இல்லை அதனால் தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணம் பேச்சியம்மாளுக்கு ஜெகனும், பகவதியும் கிரையம் செய்து கொடுத்து உள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தெரியாது. எதிர்வழக்குரையில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டு உள்ளது என்றும், அதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் விபரம் எனக்கு தெரிவிக்கப்படவில்லை என்றால் தெரிவிக்கப்படவில்லை. எனது அண்ணன் மகன் ஜெகனிடம் கேட்ட போது என் இடத்தை விற்கவில்லை என்று சொல்லி விட்டார். எனது அண்ணன் மகள் ஜெயந்தி என்பவரிடம் கேட்டபோது ஜெயந்தியின் இடத்தை தான் விற்றேன் என்றும், என்னுடைய இடத்தை விற்கவில்லை என்றும் சொல்லிவிட்டார். நிலங்கள், நில அமைப்புகளை நீதிமன்றத்தில் மூலம் பார்வையிட்டால் நான் பிராதில் சொல்லியபடி நிலத்தின் அமைப்புகள் உள்ளது என தெரியவருமா என்றால் அதை நீங்கள் தான் பார்த்துக்கொள்ளவேண்டும். நான் நடவடிக்கை எடுத்தால் உண்மை விபரம் தெரியவரும் என்பதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் சொல்லப்பட்டுள்ள உட்பிரிவுகளின் படி நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள எல்கை மால் விபரமும், உட்பிரிவும் ஒரே மாதிரியாக இல்லை என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் கிரையம் கொடுத்த நில விபரமும், ஜெகன் மற்றும் பகவதி கிரையம் கொடுத்த நில விபரமும் தவறானது. அப்படி தவறானது

என்பது குறித்து நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணியன் உயிருடன் இருக்கும் வரை நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் உள்ள நிலத்தின் ஆதி உரிமையாளர் பெயர் சுப்பையா, தங்கவேல் ஆகும். தங்கவேலின் தகப்பனார் பெயர் சிவகிருஷ்ண வேல் என்றால் சரிதான். சுப்பையாவின் தகப்பனார் பெயர் முருகாண்டி என்றால் சரிதான். சிவகிருஷ்ணவேலும், முருகாண்டியும் ஒன்றுவிட்ட சகோதரர் என்றால் சரிதான்.தங்கவேலுக்கும், சுப்பையாவிற்கும் பூவாணி கிராமதில் சர்வே எண். 315/2 ல் செண்ட் 48 ன் வடபுறம் செண்ட் 24 பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த 24 செண்ட்டை தான் பொன்னுசாமி குமாரர் சுப்பிரமணியன், ஏமன் குமாரர் சுடலைமணி மற்றும் ஏமன் குமாரார் மணி ஆகிய 3 பேருக்கும் 16, 4,4 செண்ட் என்ற அடிப்படையில் கிரையம் செய்து கொடுத்து உள்ளார்கள் என்றால் சரிதான்.

7. ஏமன் குமாரர் மணிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்ட ஆவணத்தை தான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது ஆதார் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம், வாக்காளர் அடையாள அட்டை என் வசம் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி ஆவணத்தில் எனது பெயர் எவ்வாறு குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் மணி என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. மணி என்ற முருகையா என்ற பெயரில் ஏதாவது ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் முருகையா என்ற பெயரில் தனியாகவும், மணி என்ற பெயரில் தனியாகவும் உள்ளது. முருகையா என்ற பெயரில் எந்த ஆவணம் உள்ளது என்றால் மணி என்ற பெயரை நீக்கிவிட்டு, மணி என்ற முருகையா என்று தற்போது ஆதார் அடையாள அட்டையை மாற்றி உள்ளேன். முருகையா பெயரில் தனியாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை உள்ளது. மணி என்ற முருகையா பெயரில் உள்ள ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யதாதற்கு ஏதாவது காரணம் உள்ளதா

என்றால் இல்லை. நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்து இருந்தால் உண்மை விபரம் தெரிந்து விடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் ஏமன் என்றும் கூப்பிடுவார்கள், ஆறுமுகம் என்றும் கூப்பிடுவார்கள். ஏமன் என்ற ஆறுமுகம் என்று ஏதாவது ஆவணம் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. எனது தாத்தா பெயர் ஏமன் என்பதால் எனது அப்பாவை ஏமன் மகன் ஆறுமுகம் என்றும் கூப்பிடுவார்கள். ஏமன் என்றும் கூப்பிடுவார்கள்.

8. ஒரு பொய்யை மறைப்பதற்காக புது புது பொய்யை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது உண்மையான பெயர் மணி என்ற முருகையா கிடையாது என்றாலும் முருகையா தான் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் ஆறுமுகம் தான் என்று சொன்னால் ஏமன் என்றும் கூப்பிடுவார்கள். சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக முருகையா என்ற எனது பெயரை மணி என்ற முருகையா என்றும், எனது தகப்பனார் பெயர் ஆறுமுகம் என்பதை மறைத்து ஏமன் என்ற ஆறுமுகம் என்றும் வழக்குரையில் பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. ஆறுமுகம் மனைவி பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். வள்ளியம்மாளுக்கு முருகையா, பழனி, தங்கப்பழம் ஆகிய 3 ஆண்மக்களும், சீதா என்ற ஒரு பெண்மகளும் என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆறுமுகமும், ஏமன் என்பவரும் வெவ்வேறான நபர் என்றால் சரியல்ல. எனது தாயார் வள்ளியம்மாறுக்கு 2 கணவர், முதல் கணவர் பெயர் சின்னக்கனி, 2வது கணவர் பெயர் ஏமன் என்ற ஆறுமுகம், வள்ளியம்மாளின் முதல் கணவர் பெயர் ஏமன் என்றால் சரியல்ல. வள்ளியம்மாளின் முதல் கணவர் சின்னக்கனி என்பதை காட்டுவதற்கு ஏதாவது ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. சின்னக்கனிக்கும், வள்ளியம்மாளுக்கும் பிறந்தவர் தான் சுடலைமணி என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஏமன் மறைவிற்கு பிறகு வள்ளியம்மாள் ஆறுமுகத்தை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. சின்னக்கனி என்பவர் வள்ளியம்மாளை கைவிட்டு விட்டு சின்னத்தாய் என்பவரை திருமணம் செய்து

சுடலைமாடி, சந்திரா, நீலா ஆகிய 3 பெண் குழந்தைகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உறவு முறைகளை விவரித்து சொல்லவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாளுக்கும், அவரது முதல் கணவர் ஏமனுக்கும் பிறந்த குழந்தை தான் சுடலைமணி என்றால் சரியல்ல. சுடலை மணியை மணி என்று கூப்பிடுவார்கள் என்றால் சரியல்ல. சுடலைமணியும், மணியும் ஒரே நபர் என்றால் சரியல்ல. மணி என்ற சுடலை மணி என்பவர் தான் 1ம் பிரதிவாதி பகவதியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்சொன்ன இருவருக்கும் பிறந்தவர் தான் 2ம் பிரதிவாதி ஜெகனும், ஜெயந்தியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 க்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் எனது பெயரை மணி என்ற முருகையா என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கவேலும், சுப்பையாவும் எனது பெயருக்கு வா.சா.ஆ.1யை கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பெயருக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படவில்லை என்பதால் தான் மணி என்ற முருகையா என புனைப்பெயரை சேர்த்து பிராதை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. பொன்னுசாமிக்கும் ஏமனுக்கும் என்ன உறவு என்றால் என் தாயார் வள்ளியம்மாளும், சுப்பரமணியனின் அம்மா சுடலை மாடியும் உடன்பிறந்தவர்கள். வா.சா.ஆ.1ன் அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்பதற்க்காக சுப்பிரமணியனிடம் கொடுத்தாக பிராதில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்மனைவி பெயர் பொன்னுத்தாய். சுப்பிரமணியன், சுடலை மணி, எனக்கும் தனித்தனி பட்டாக்கள் இருந்தன. சுப்பிரமணியனும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து அவர்கள் நிலத்தை விற்க்க போகிறேன் என்றும் , எவ்வளவு இடம் இருக்கிறது என்று பார்க்கவேண்டும் என்றும் எனது மனைவியிடம் பட்டாவை வாங்கி சென்றுவிட்டார்கள்.

9. சுப்பிரமணியனும், 2ம் பிரதிவாதியும் அவர்கள் நிலத்தை விற்ப்பனை செய்துவிட்டு என்னுடைய அசல் ஆவணத்தை தந்துவிட்டார்களா என்றால் தருகிறேன் என்று சொல்லிவிட்டு தரவில்லை. வா.சா.ஆ.1 ன் அசல்

சுப்பிரமணியனிடமும், 2ம் பிரதிவாதியிடமும் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 ன் அசலை என்னிடம் சுப்பிரமணியனும், 2ம் பிரதிவாதியும் ஒப்படைக்காததால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சுப்பிரமணியனும், 2ம் பிரதிவாதியும் அவர்கள் இடத்தை கிரையம் செய்ய வாங்கி சென்றதாக பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசல் கிரைய ஆவணத்தை பற்றி எந்தவித புகார் கொடுக்காத நிலையில் நான் தாக்கல் செய்துள்ள நகல் கிரைய ஆவணத்தை ஏற்றுகொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கும் போது வா.சா.ஆ.1 அசலை கிரையம் வாங்கிய நபர் 3ம் பிரதிவாதியிடம் கொடுத்து தற்போது 3ம் பிரதிவாதி வசம் அசல் உள்ளது என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.6 யை கிரையம் பெற்ற பொன்னுசாமி குமாரர் சுப்பிரமணியன் கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எல்கைமாலும், பி.வா,சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற மகாலட்சுமி கிரைய ஆவணத்தில் எல்கைமாலும் வேறுபட்டுள்ளது என்றால் சரிதான் . அதில் தவறாக போட்டுள்ளார்கள். தவறாக குறிப்பிட்டுள்ளார்கள் என்று நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. தவறாக எல்கை மால் போட்டு விற்றதால் என்னுடைய இடத்திற்க்கு பாதிப்பு உள்ளதா என்றால் உள்ளது. பாதிப்பு ஏற்ப்படுத்திய மகாலட்சுமி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆறுமுகம் மகன் பழனிகுமார் தான் செய்யவேண்டும். ஆறுமுகம் மகன் பழனிகுமார் என்பவருக்கு எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம்பாத்தியம் என்றால் தெரியாது.

10. வா.சா.ஆ.6 ல் பூவாணி கிராம மால் புது சர்வே எண். 315/2 நிர், புன்சை செண்ட் 48ல் வடபுறம் செண்ட் 24ல் வடபுறம் செண்ட் 16 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ-3 புலவரைபடத்தில 2பி வடக்கு பக்கமாகவும், 2 ஏ தெற்கு பக்கமாகவும் உட்பிரிவு செய்யப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வழக்கு சொத்து 315 2ஏ ல் உள்ளதாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் 2பி ல் இருப்பதாக குறிப்பிட்டு உள்ளேன். புல

வரைபடத்தின் படி 315/2 செண்ட் 48 நிலம் தென் புறமாகத்தான் அமைந்து உள்ளது என்றால் வடபுறமாக உள்ளது. பூமியில் மகாலெட்சுமி வடபுறத்தில் வீடுகட்டி அனுபவித்து வருகிறார் என்றால் தவறாக வீடு கட்டி அனுபவித்து வருகிறார். மகாலெட்சுமி வீடுகட்டி அனுபவித்து வருகிற இடத்திற்கு வட புறத்தில் கீழ்புறம் 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நிலமும், வடபுறத்தின் மேல்புறம் 1,2 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த வா.சா.ஆ.7 ல் உள்ள இராஜேந்திரனும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் தவறாக அனுபவம் செய்து வருகிறார்கள். பூமியில் மகாலெட்சுமி, இராஜேந்திரன், 3ம் பிரதிவாதி பேச்சியம்மாள் தவறாக எல்கைமாலில் அனுபவம் செய்து வருகிறார்கள் என பிராதில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. புல எண். 315/2 செண்ட் 48 ல் உள்ள அனைத்து உரிமையாளர்களும் இந்த வழககிற்கு தேவையான நபர்கள் என்றால் சரியல்ல. அதனால் அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

11. எனக்கும், 1ம் பிரதிவாதியின் கணவர் சுடலைமணிக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து எனது சகோதரர் சுடலை மணி என்று வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல. மகாலெட்சுமி வீடு கட்டியுள்ள இடத்திற்கு வடபுறத்தில் கீழ்பக்கம் உள்ள இடத்தை தான் பேச்சியம்மாள் அனுபவம் செய்து வருகிறார் என்றால் கிரையம் தான் பெற்று உள்ளார்.அனுபவிக்கவில்லை. பேச்சியம்மாள் இடத்தில் வேலி உள்ளதா என்றால் பழனிக்குமார் வேலி போட்டு உள்ளார். ஆனால் பழனிக்குமார் இடம் எனது இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். மகாலெட்சுமி வீடுகட்டியுள்ள இடத்திற்கு வடபுறம் 16 செண்ட்ற்கு அடுத்த வடபுறம் நான் அனுபவம் செய்து வருகிறேன். ஆனால், பிராது வரைபடத்தில் மகாலெட்சுமியின் இடம் எங்கு உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் மகாலெட்சுமி இடத்திற்கு வடபுறம் 16 செண்ட் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு வடபுறம்

தான் நான் அனுபவம் செய்து வரும் இடம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராது வரைபட படி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரிப்பும் தவறானது என்றால் சரியல்ல. தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் வரைபடத்தின் படி தீர்ப்பு வழங்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பூவாணி கிராமம், புல எண். 315/2 புன்செய் செண்ட் 48 வடபுறம் செண்ட் 24 ல், கீழ்புறம் செண்ட் 4 அளவுள்ள நிலத்தை ஏமன் குமாரர் சுடலை மணி என்ற மணி அனுபவித்து வந்து அப்பால் மேற்படியாரின் மறைவிற்கு பிறகு 1,2 பிரதிவாதிகள் மற்றும் ஜெயந்தி வாரிசுதாரர்கள் நிலைமையில் கூட்டாக அனுபவித்து வந்து பின் அவர்களுக்குள் வாய்மொழிபாகம் செய்து கொண்டதில் 1,2 பிரதிவாதிகளுக்கு கிடைத்து கூட்டாக அனுபவித்து வந்து, அதன் பின்பு 06.05.2022 ல் வா.சா.ஆ.8 ன் மூலம் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டு அந்த கிரையம் காலம் முதல் 3 ம் பிரதிவாதியின் அனுபவித்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பணத்தை மோசடி செய்வதற்காக ஆவணங்களை உருவாக்கி உள்ளதாக பிராதில் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் படி எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 செல்லாது என வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் சரியானது அல்ல என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி நல்லெண்ண கிரையதாரர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் படி எனக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் ஒரு காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் உயிருடன் இருக்கும் காலம் வரைக்கும் வழக்கு சொத்தில் எந்த வித வில்லங்கமும் இருப்பதாக வழக்கு நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்றால் சரிதான். ஒன்றாக இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. பொன்னுச்சாமி குமாரார் சுப்பிரமணியனின் மறைவை பயன்படுத்தியும், பொய் விபரங்களை எடுத்துரைத்தும், வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்தில் பொய்யாக உரிமை கொண்டாடு கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் விவரித்துள்ள உறவுமுறைகளும், பெயர் விபரங்களும், தபசில் சொத்தை அபகரிக்க வேண்டும்

எண்ணத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம்/-

சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.